# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கணம்)

பகுதி : **பிழைதிருத்தம் (i) சந்திப்பிழையை நீக்குதல் (ii) ஒருமை பன்மை - பிழைகளை நீக்குதல் மரபுப் பிழைகள், வழுவுச் சொற்களை நீக்குதல் - பிறமொழிச் சொற்களை நீக்குதல்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பிழைத்திருத்தம்

**பிழைத்திருத்தம்**

**சந்திப்பிழை நீக்குதல்**

- ஒரு சொல் வல்லினத்தை முதலாவதாக கொண்ட மற்றொரு சொல்லோடு சேரும் போது வல்லின ஒற்று இடையில் சேரும் இதனை வல்லினம் மிகும் என்பர். க,ச,த,ப என்னும் வல்லின உயிர் மெய்களைக் கொண்ட சொற்கள் வரும்பொழுது சில இடங்களில் க்,ச்,த்,ப் என்னும் மெய்கள் தோன்றி உச்சரிப்பை எளிமையாக்கும். சில இடங்களில் தோன்றாமலேயே இயல்பாக நிற்கும். இதனை வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள் என்று அழைப்பர். எந்தெந்த இடங்களில் வல்லினம் மிகும், வல்லினம் மிகாது எனக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>வல்லினம் மிகும் இடங்கள்</u>**

1. இரண்டாம் வேற்றுமை விரி(ஐ)யில் வல்லினம் மிகும்.

- புலியை கொன்றான் - புலியைக் கொன்றான்
- பொருளை சேர்த்தான் - பொருளைச் சேர்த்தான்
- நூலை படி - நூலைப் படி
- பகையை துரத்து - பகையைத் துரத்து

2. நான்காம் வேற்றுமை விரி (கு) யில் வல்லினம் மிகும்.

- வீட்டுக்கு போனேன் - வீட்டுக்குப் போனேன்
- நண்பனுக்கு கொடு - நண்பனுக்குக் கொடு
- பூட்டுக்கு சாவி - பூட்டுக்குச் சாவி
- ஊருக்கு பாதை - ஊருக்குப் பாதை

3. வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் இருவகை புணர்ச்சியிலும் வலி மிகும்.

- அச்சு பலகை - அச்சுப்பலகை
- வாக்கு கொடு - வாக்குக் கொடு
- பாக்கு தூள் - பாக்குத் தூள்
- படித்து பார் - படித்துப் பார்

4. ஓரெழுத்து ஒருமொழியின் பின் வல்லினம் மிகும்.

- ✶ தீ புகை - தீப்புகை
- ✶ தை பொங்கல் - தைப்பொங்கல்
- ✶ ஈ தலை - ஈத்தலை
- ✶ அ குடம் - அக்குடம்

5. தனிக் குறிலை அடுத்து வரும் ஆ எனும் நெடிலுக்குப் பின் வலி மிகும்.

- ✶ பலா சுளை - பலாச்சுளை
- ✶ உலா பாடினான் - உலாப் பாடினான்
- ✶ இரா பகல் - இராப்பகல்
- ✶ கனா திறம் - கனாத்திறம்

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

- ✶ பச்சை பட்டு - பச்சைப் பட்டு
- ✶ வட்டம் கோட்டை - வட்டக்கோட்டை
- ✶ சதுரம் பலகை - சதுரப்பலகை
- ✶ வண்ணம் களஞ்சியம் - வண்ணக் களஞ்சியம்

7. மற்ற, இனி, தனி, மற்று, மற்றை எனும் சொற்களுக்குப் பின் வலி மிகும்.

- ✶ இனி போகலாம் - இனிப் போகலாம்
- ✶ தனி காடு - தனிக்காடு
- ✶ மற்று கண்டவை - மற்றுக் கண்டவை
- ✶ மற்ற பொருள் - மற்றப் பொருள்
- ✶ மற்றை கூறுகள் - மற்றைக் கூறுகள்

8. உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

- ✶ சால சிறந்தது - சாலச் சிறந்தது
- ✶ தவ பெரியது - தவப் பெரியது
- ✶ தவ பயன் - தவப்பயன்

9. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு இச்சொற்களுக்குப் பின் வலி மிகும்.

- ✶ அந்த தோட்டம் - அந்தத் தோட்டம்
- ✶ இந்த படம் - இந்தப் படம்
- ✶ அப்படி செய்தான் - அப்படிச் செய்தான்
- ✶ எப்படி பார்ப்பார் - எப்படிப் பார்ப்பார்

- ✶ அங்கு சென்றான் - அங்குச் சென்றான்
- ✶ இங்கு சென்றான் - இங்குச் சென்றான்

10. ஆய், போய் எனும் வினையெச்சங்களுக்குப் பின் வலி மிகும்.
    - ✶ படிப்பதாய் சொன்னான் - படிப்பதாய்ச் சொன்னான்
    - ✶ போய் சேர்ந்தான் - போய்ச் சேர்ந்தான்

11. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.
    - ✶ ஓடா புலி - ஓடாப் புலி
    - ✶ வளையா செங்கோல் - வளையாச் செங்கோல்

12. முற்றியலுகர சொற்களுக்குப் பின் வலி மிகும்.
    - ✶ திரு குறள் - திருக்குறள்
    - ✶ பொது சொத்து - பொதுச் சொத்து

13. உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
    - ✶ மழை காலம் - மழைக்காலம்
    - ✶ பனி துளி - பனித்துளி

14. எட்டு, பத்து எண்களுக்குப் பின் வல்லினம் மிகும்.
    - ✶ எட்டு தொகை - எட்டுத்தொகை
    - ✶ பத்து பாட்டு - பத்துப்பாட்டு

15. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
    - ✶ எலி குஞ்சு - எலிக்குஞ்சு
    - ✶ பனி துளி - பனித்துளி
    - ✶ மார்கழி திங்கள் - மார்கழித் திங்கள்
    - ✶ எறும்பு சாரை - எறும்புச் சாரை

**<u>வல்லினம் மிகா இடங்கள்</u>**

1. பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகாது:
   வந்த புத்தகம், படித்த பையன், புதிய பொம்மை
2. மூன்றாம், ஆறாம் வேற்றுமை விகுதிமுன் வல்லினம் மிகாது:
   அவனது நோட்டு, எனது சட்டை, கண்ணனோடு விளையாடு.
3. சுட்டுப் பெயர்களின் முன் வல்லினம் மிகாது:
   அது சிறியது, இது பெரியது
4. எட்டு, பத்து தவிர மற்ற எண்களின் முன் வல்லினம் மிகாது:

ஒரு பேனா நான்கு கால்கள், ஏழு கடல்

5. இரண்டாம் வேற்றுமைத் தொகையின் முன் வல்லினம் மிகாது:
   கதை சொன்னான், காடு கடந்தான்
6. என்று என்னும் சொல்லின் முன் வல்லினம் மிகாது:
   என்று கூறினார், என்று சொன்னான்
7. ஈறுகெடாத பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகா:
   ஓடாத குதிரை, ஆடாத பொம்மை
8. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது:
   தாய்தந்தை, செடிகொடி
9. எழுவாய்ப் பெயர் வல்லினம் மிகாது :
   கண்ணகி கண்டாள், நம்பி பார்
10. வினைத்தொகையின் வல்லினம் மிகாது :
   ஊறுகாய், சுடுகாடு
11. பலவகை வினை எச்சங்களின் முன் வல்லினம் மிகாது:
   நடந்து போனான், உண்டு களித்தான், சோர்ந்து போனான்
12. ஆ, யா, ஒ, ஏ என்னும் விளா இடங்களில் மிகாது:
   அவளா பேசியது, காயோ கனியோ
13. படி என்னும் சொல்வருமிடத்தில் வல்லினம் மிகாது:
   அதன்படி நட, சொன்னபடி கேள்
14. வினைமுற்றுகளின் முன் வல்லினம் மிகாது:
   பறந்தன பறவைகள், வந்தன கூட்டம்
15. விளிப்பெயர், ஏவல், முன்னிலை வினைமுற்று வல்லினம் மிகாது:
   வா தம்பி, போ, தம்பி
16. சிறிய, பெரிய என்ற சொற்களின் முன் வல்லினம் மிகாது:
   சிறிய கடை, பெரிய பை, பெரிய கோவில்

**ஒருமைப் பன்மை - பிழை நீக்குதல் மரபு பிழைகள்**

- ஒரு வாக்கியத்தில் எழுவாய் பன்மையில் இருக்கும் பொழுது பயனிலையும் பன்மையில் தான் இருக்க வேண்டும். வாக்கியங்களைப் பிழையின்றி எழுதச் சில இலக்கண நெறிகளைக் கையாள வேண்டும். அவையாவன,
  1. உயர்திணை எழுவாய், உயர்திணைப் பயனிலையைப் பெற்று வரும். அதேபோன்று அஃறிணை எழுவாய்க்குப்பின் அஃறிணை வினைமுற்றே வரவேண்டும்.
  2. எழுவாய் ஐம்பால்களுள் எதில் உள்ளதோ அதற்கேற்ற வினைமுற்றையே பயன்படுத்த வேண்டும்.
  3. கள் விகுதி பெற்ற எழுவாய், வினைமுற்றிலும் கள் விகுதிபெறும். அதே போன்று அர் விகுதி பெற்றிருந்தால் வினைமுற்றிலும் அர் விகுதிபெறும்.

4. எழுவாய் ஒருமையாயின் வினைமுற்றும் ஒருமையாகவே இருக்க வேண்டும்.
5. கூறியது கூறல் ஒரே தொடரில் இடம் பெறக் கூடாது.
6. வாக்கியத்தில் உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் கலந்துவந்தால், சிறப்புக் கருதின் உயர்திணைப் பயனிலைக் கொண்டும், இழிவு கருதின் அஃறிணைப் பயனிலை கொண்டும் வாக்கியத்தை முடிக்க வேண்டும்.

**எ.கா:**

| பிழை | திருத்தம் |
|---|---|
| 1. தங்கை வருகிறது | தங்கை வருகிறாள் |
| 2. தம்பி வந்தார் | தம்பி வந்தான் |
| 3. மாணவர்கள் எழுதினர் | மாணவர்கள் எழுதினார்கள் |
| 4. ஆசிரியர் பலர் வந்தார்கள் | ஆசிரியர் பலர் வந்தனர் |
| 5. மங்கையர்க்கரசியார் பேசினாள் | மங்கையர்க்கரசியார் பேசினார் |
| 6. என் எழுதுகோல் இதுவல்ல | என் எழுதுகோல் இதுவன்று |
| 7. அவன் மாணவன் அல்ல | அவன் மாணவன் அல்லன் |
| 8. உடைகள் கிழிந்து விட்டது | உடைகள் கிழிந்து விட்டன |
| 9. செழியன் இன்று ஒரு புதிய நூல் ஒன்று வாங்கினான் | செழியன் இன்று புதிய நூல் ஒன்று வாங்கினான் |
| 10. தலைவர் நாளை வந்தார் | தலைவர் நாளை வருவார் |
| 11. ஆமைகள் வேகமாக ஓடாது | ஆமைகள் வேகமாக ஓடா |
| 12. நதிகள் தோன்றுமிடத்தில் சிறியதாய் இருக்கும் | நதிகள் தோன்றுமிடத்தில் சிறியனவாய் இருக்கும் |
| 13. தலைவர் தன் தொண்டர்களுக்கு நன்றி கூறினார் | தலைவர் தம் தொண்டர்களுக்கு நன்றி கூறினார் |
| 14. ஒவ்வொரு ஊர்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது | ஒவ்வோர் ஊரிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது. |
| 15. தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் தொன்மையானது | தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தொன்மையானது |
| 16. மூடனும் மாடும் குளத்தில் குளித்தனர் | மூடனும் மாடும் குளத்தில் குளித்தன |
| 17. ஆற்று வெள்ளத்தில் மரங்களும் குடிசைகளும் மக்களும் மிதந்து சென்றனர் | ஆற்று வெள்ளத்தில் மரங்களும் குடிசைகளும் மக்களும் மிதந்து சென்றன. |

**வழூவுச் சொற்களை நீக்குதல் - பிறமொழி சொற்களை நீக்குதல்**

❖ இப்பகுதி வினாக்கள் தேர்வாளர்களின் தமிழ் புலமையை அறியும் விதத்தில் பிறமொழிச் சொற்றொடர்களையும், துூய தமிழ்ச் சொற்றொடர் ஒன்றையும் கொடுத்து கேட்கப்படுகின்றன. அதற்கேற்ப பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை கீழே கொடுத்துள்ளோம். இவற்றை நன்கு படித்து நினைவில் நிறுத்திக்கொள்ளவும்.

| வழூஉச் சொற்கள் | திருத்தம் | வழூஉச் சொற்கள் | திருத்தம் |
|---|---|---|---|
| சிகப்பு - | சிவப்பு | ஒருக்கால் - | ஒருகால் |
| அகண்ட - | அகன்ற | கத்திரிக்காய் - | கத்தரிக்காய் |
| அதுகள் - | அவை | கம்பிளி | - கம்பளி |
| அருவாமனை- | அரிவாள்மனை | கறம் | - கரம் |
| அருகாமையில்- | அருகில் | காக்கா | - காக்கை |
| அறுவறுப்பு - | அருவருப்பு | கிரணம் | - கிரகணம் |
| அங்கிட்டு - | அங்கு | குடக்கூலி | - குடிக்கூலி |
| அமக்களம் - | அமர்க்களம் | கோர்வை | - கோவை |
| அத்தினி - | அத்தனை | சமயல் | - சமையல் |
| அவுத்து - | அவிழ்த்து | சிலது | - சில |
| ஆச்சு - | ஆயிற்று | அப்ளாம் | - அப்பளம் |
| இரும்பல் - | இருமல் | அடமழை | - அடைமழை |
| இங்கிட்டு - | இங்கு | ஆத்திற்கு | - ஆற்றிற்கு |
| இறச்சி - | இறைச்சி | ஆம்பிள்ளை | - ஆண்பிள்ளை |
| இவையன்று - | இவையல்ல | இடதுபக்கம் | - இடப்பக்கம் |
| ஈர்கலி - | ஈர்கொல்லி | இடதுகை | - இடக்கை |
| உடமை - | உடைமை | இளனி | - இளநீர் |
| உருச்சி - | உரித்து | இடைபோடு | - எடைபோடு |
| ஊரணி - | ஊருணி | இத்துபோதல் | - இற்றுப்போதல் |
| ஒத்தடம் - | ஒற்றடம் | உசிர் | - உயிர் |
| ஒம்பது - | ஒன்பது | உந்தன் | - உன்றன் |
| கறம் - | கரம் | உலந்து | - உலர்ந்து |
| கயறு, கவுறு - | கயிறு | எண்ணெ | - எண்ணெய் |
| அருணைக் | | ஒருக்கால் | - ஒருகால் |
| கயிறு - | அரைஞாண்கயிறு | ஒட்டரை | - ஒட்டடை |
| புஞ்சை - | புன்செய் | கடப்பாறை | - கடப்பாரை |
| பாவக்காய் - | பாகற்காய் | இசிக்கின்றான் | - இழிக்கின்றான் |
| தவக்களை - | தவளை | காத்து | - காற்று |
| கொரங்கு - | குரங்கு | ஆத்தக்கரை | - ஆற்றங்கரை |
| முயற்சித்தார் - | முயன்றார் | காவா | - வாய்க்கால் |
| பேரன் - | பெயரன் | தோப்பனார் | - தகப்பனார் |
| வேர்வை - | வியர்வை | வண்ணாத்திப்பூச்சி-வண்ணத்துப்பூச்சி | |
| இடதுபுறம் - | இடப்புறம் | பேத்தி | - பெயர்த்தி |
| உசிரு - | உயிர் | இத்தினை | - இத்தனை |
| எம்பது - | எண்பது | இடபோடு | - எடைபோடு |
| ஒருவள் - | ஒருத்தி | எழவு | - இழவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கண்ணாலம் | - | கலியாணம் | முந்தாணி | - | முன்றாணை |
| கடகால் | - | கடைக்கால் | ரொம்ப | - | நிரம்ப |
| கவுளி | - | கவளி | வலதுபக்கம் | - | வலப்பக்கம் |
| கட்டிடம் | - | கட்டடம் | வெய்யல் | - | வெயில் |
| கருவேற்பிலை | - | கறிவேப்பிலை | வெட்டிப்பேச்சு | - | வெற்றுப்பேச்சு |
| கெனவு | - | கனவு | சுவற்றில் | - | சுவரில் |
| கோடாலி | - | கோடரி | தமயன் | - | தமையன் |
| சந்தணம் | - | சந்தனம் | தாப்பாள் | - | தாழ்ப்பாள் |
| சாயங்காலம் | - | சாயுங்காலம் | திருவிளா | - | திருவிழா |
| சிலவு | - | செலவு | துடங்கு | - | தொடங்கு |
| சீக்காய் | - | சீகைக்காய் | நஞ்சை | - | நன்செய் |
| தடுமாட்டம் | - | தடுமாற்றம் | நெனவு | - | நினைவு |
| தலகாணி | - | தலையணை | நோம்பு | - | நோன்பு |
| தாவாரம் | - | தாழ்வாரம் | பொண்ணு | - | பெண் |
| திரேகம் | - | தேகம் | மாத்தினான் | - | மாற்றினான் |
| தொடப்பம் | - | துடைப்பம் | மாச்சி | - | மாட்சி |
| நாத்தம் | - | நாற்றம் | முழித்தான் | - | விழித்தான் |
| நேத்து | - | நேற்று | மோர்ந்து | - | மோந்து |
| பன்னெண்டு | - | பன்னிரெண்டு | முன்னூறு | - | முந்நூறு |
| புண்ணாக்கு | - | பிண்ணாக்கு | வயறு | - | வயிறு |
| பொம்பளை | - | பெண்பிள்ளை | வெங்கலம் | - | வெண்கலம் |
| மாயிலை | - | மாவிலை | வேணும் | - | வேண்டும் |
| முழுங்கு | - | விழுங்கு | வைக்கல் | - | வைக்கோல் |
| மெனக்கெட்டு | - | வினைகெட்டு | | | |

**போர்ச்சுகீசிய இணையான தமிழ்ச்சொற்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சொற்கள் | - | தமிழ்ச்சொற்கள் | தராசு | - | துலாக்கோல் |
| அலமாரி | - | நெடும்பேழை | நபர் | - | ஆள் |
| சாவி | - | திறவுகோல் | அக்கரை | - | அவசியம் |
| உருது | - | தமிழ் | அதிகம் | - | மிகுதி |
| ஆசாமி | - | ஆள் | சொற்கள் | - | தமிழ்ச்சொற்கள் |
| இலாக்கா | - | துறை | கிராம்பு | - | இலவங்கம் |
| உருமால் | - | மேலாடை | சன்னல் | - | காலதர் |
| கஜானா | - | கருவூலம் | அசல் | - | முதல் |
| காலி | - | வெற்றிடம் | ஆஜர் | - | வருகை |
| கிஸ்தி | - | வரி | இனாம் | - | அன்பளிப்பு |
| தாலுக்கா ஆபிஸ் | - | வட்டாச்சியர் | ஜவோஜி | - | உடைமை |
| | | அலுவலகம் | காகிதம் | - | தாள் |
| கெஜம் | - | மூன்றடி | காஜி | - | நடுவர் |
| சர்க்கார் | - | அரசு | குமாஸ்தா | - | எழுத்தர் |
| டோபிகானா | - | துணி | பஜார் | - | கடைத்தெரு |
| | | வெளுப்பவன் | சந்தா | - | கட்டணம் |
| தயார் | - | முன்னேற்பாடு | சிபாரிசு | - | பரிந்துரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தபால் | - | அஞ்சல் | அக்கிராசனாதிபதி | - | தலைவர் |
| தாஸ்தாவேஜ் | - | ஆவணம் | அநீதி | - | முறையற்றது |
| நகல் | - | ஒத்தபடி | அபயம் | - | அடைக்கலம் |
| நமூனா | - | விண்ணப்பம் | அப்பியாஸம் | - | பயிற்சி |
| அடாவடி | - | தீயது | அபிஷேகம் | - | திருமுழுக்கு |
| அந்தஸ்து | - | ஒழுங்கு நிலை | அபூர்வம் | - | அரிது |
| அப்பட்டம் | - | கலப்பில்லாதது | அவகாசம் | - | ஒய்வு |
| இரப்பை | - | கண்மடல் | அவசியம் | - | தேவை |
| இரவிக்கை | - | மார்க்கச்சு | ஆஸ்தி | - | சொத்து |
| இறக்கை | - | பறவையின் | இரம்பம் | - | வாள் |
| | | சிறகு | இராணுவம் | - | படை |
| உப்புசம் | - | வீக்கம் | இலஞ்சம் | - | பரிதானம் |
| பந்துமித்ரர் | - | சுற்றம், நட்பு | உபந்நியாசம் | - | சமய |
| நமஸ்காரம் | - | வணக்கம் | | | சொற்பொழிவு |
| அமுல் | - | நடைமுறை | ஆசிர்வதித்தல் | - | வாழ்த்துதல் |
| ஆசாமி | - | ஆள் | அண்டா | - | பாத்திரம் |
| இலாகா | - | ஆட்சி எல்லை | அல்லா | - | கடவுள் |
| உல்டா | - | உண்மைக்கு | ஆர்ப்பாட்டம் | - | ஆடம்பரம் |
| | | மாறான | உஷார் | - | ஜாக்கிரதை |
| கப்சுப் | - | அமைதி | கஜானா | - | கருவூலம் |
| கலாட்டா | - | கலவரம் | கம்மி | - | குறைவு |
| காஜா | - | பொத்தான் | காகிதம் | - | தாள் |
| குமாஸ்தா | - | காரியஸ்தன் | குசால் | - | உல்லாசம் |
| சட்னி | - | துவையல் | கைதி | - | சிறைப்பட்டவன் |
| சவால் | - | வினா | சதா | - | எப்பொழுதும் |
| சீனி | - | சர்க்கரை | சாமான் | - | பண்டம் |
| சைத்தான் | - | பிசாசு | சுமார் | - | ஏறக்குறைய |
| ஜதை | - | இரட்டை | ஷர்வத் | - | இனியபானகம் |
| ஜில்லா | - | மாவட்டம் | ஜாலம் | - | வஞ்சனை |
| டேரா | - | கூடாரம் | ஜோப்பி | - | சட்டைப்பை |
| தமாஸ் | - | வேடிக்கை | தகராறு | - | வாக்கு வாதம் |
| துக்கடா | - | துண்டு | தாக்கல் | - | பதிவு செய்தல் |
| நபர் | - | ஆள் | நதி | - | ஆறு |
| பட்டாசு | - | சீனவெடி | பங்களா | - | மாடிவீடு |
| பராசு | - | காவல் | பயில்வான் | - | வீரன் |
| அகங்காரம் | - | செருக்கு | பிசாசு | - | பேய் |
| அக்கினி | - | தீ | அகதி | - | ஆதரவற்றோர் |

| | | |
|---|---|---|
| அக்கிரகாரம் | - | பார்ப்பனர் |
| அங்கத்தினர் | - | உறுப்பினர் |
| அங்கீகாரம் | - | ஒப்புதல் |
| அபாயம் | - | துன்பம் |
| அபிவிருத்தி | - | பெருவளர்ச்சி |
| அபிப்பிராயம் | - | உட்கருத்து |
| அர்ச்சனை | - | மலரிட்டு |
| அவயம் | - | உறுப்பு |
| அனுகிரகனம் | - | அருள் செய்தல் |
| அனுபவம் | - | பட்டறிவு |
| அனுமானம் | - | உய்த்தறிதல் |
| ஆக்கிரமிப்பு | - | வலிந்து கவர்தல் |
| ஆராதனை | - | வழிபாடு |
| ஜாமீன் | - | பிணை |
| இமாலயம் | - | பனிமலை |
| இரத்தினம் | - | செம்மணி |
| இலக்கம் | - | எண் |
| இலௌகீகம் | - | உலகியல் |
| உத்திரக்கிரியை | - | நீத்தார்கடன் |
| உபத்திரவம் | - | வேதனை |
| ஐக்கியம் | - | ஒற்றுமை |
| கஷ்டம் | - | தொல்லை |
| காரியம் | - | செயல் |
| காரியதரிசி | - | செயலர், செயலாளா |
| கிரமம் | - | ஒழுங்கு |
| கிரகசாரம் | - | கோள்பயன் |
| கிரயம் | - | சிற்றூர் |
| கிருஷ்ணபக்ஷம் | - | தேய்பிறை |
| குதூகலம் | - | எக்களிப்பு |
| கைங்கரியம் | - | திருப்பணி |
| கோத்தரம் | - | குடி |
| சக்தி | - | ஆற்றல் |
| சகோதரன் | - | உடன்பிறந்தான் |
| சந்தேகம் | - | ஐயம் |
| சமத்துவம் | - | சமன்மை |
| சந்தோஷம் | - | மகிழ்ச்சி |
| சமீபம் | - | அண்மை |
| ஜலதோஷம் | - | தடுமம், நீர்க்கோவை |
| சமுதாயம் | - | மன்பதை |
| சரணம் | - | அடைக்கலம் |
| சாபம் | - | கெடுமொழி |
| சாதம் | - | சோறு |
| சாசுவத வேலை | - | நிலைப்பு வேலை |
| சிவமதம் | - | சிவநெறி |
| சீமந்தம் | - | முதற்சூல் விழா |
| சுதந்திரம் | - | உரிமை, விடுதலை |
| சுத்தம் | - | துப்பரவு |
| சுக்கிலபக்ஷம் | - | வளர்பிறை |
| சுவிசேஷம் | - | நற்செய்தி |
| சூட்சமம் | - | நுண்மை |
| சேவை | - | தொண்டு |
| சௌகரியம் | - | வசதி |
| தருமம் | - | அறம், கடமை |
| வேலை | - | பணி |
| தாமிரசாசனம் | - | செப்புப்பட்டயம் |
| திருப்தி | - | உளநிறைவு |
| நகரம் | - | பேரூர் |
| நியாயஸ்தலம் | - | வழக்கு மன்றம் |
| பகிரங்கம் | - | வெளிப்படை |
| பரிகாசம் | - | நகையாடல் |
| பத்தினி | - | கற்பணங்கு |
| பஜனை | - | வழிபாடு, கூட்டுப்பாடல் |
| பரீட்சை | - | தேர்வு |
| பந்துக்கள் | - | உறவினர் |
| பார்வதி | - | மலைமகள் |
| பாலகன் | - | குழந்தை |
| பாஷை | - | மொழி |
| பிரயாணிகள் | - | வழிச்செலவினர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரிகாரம் | - | திருச்சுற்று | மத்தியானம் | - | நண்பகல் |
| பிராத்தனை | - | நேர்த்திக்கடன் | மரணம் | - | சாவு, இறப்பு |
| பௌர்ணமி | - | முழுமதி | மார்க்கம் | - | நெறி, வழி |
| மந்திரம் | - | மறைமொழி | மாமிசம் | - | இறைச்சி |
| மரணயோகம் | - | தீயவேளை | முகம் | - | மூஞ்சி |
| மாதம் | - | திங்கள் | மோசம் | - | கேடு |
| மிருகம் | - | விலங்கு | யமன் | - | கூற்றுவன், காலன் |
| முகூர்த்தம் | - | நல்லவேளை | யாகம் | - | வேள்வி |
| மோட்சம் | - | வீடு | யாத்திரிகன் | - | திருச்செலவினன் |
| யந்திரம் | - | பொறி | ரகசியம் | - | மறைப்பொருள் |
| யாத்திரை | - | திருச்செலவு | லஷ்மி | - | லஷ்மி |
| யுத்தம் | - | போர் | லாபம் | - | லாபம் |
| ருசி | - | சுவை | விகிதம் | - | விழுக்காடு |
| சீதோஷணம் | - | தட்ப வெப்பம் | விஷயம் | - | பொருள் செய்தி |
| சுதந்திரநாள் | - | விடுதலைநாள் | விவாகம் | - | திருமணம் |
| சுத்தத்தமிழ் | - | தூயதமிழ் | ஜன்னி | - | இசிவு |
| சுயராஜ்யம் | - | தன்னாட்சி | ஜாதகம் | - | பிறப்புக்கணிப்பு |
| சுபாவம் | - | இயல்பு | ஜில்லா | - | மாவட்டம் |
| சூரியன் | - | கதிரவன், ஞாயிறு | ஜென்மம் | - | பிறவி |
| சேஷ்டை | - | குறும்பு | ஜோதிடன் | - | கணியன் |
| ஞாபகம் | - | நினைவு | ஸ்மரித்தல் | - | நினைவுகூர்தல் |
| தற்காலிகம் | - | நிலையில்லாத | நாஷ்டா | - | காலை உணவு |
| தாகம் | - | வேட்கை | பைசல் செய் | - | தீர்த்து வை |
| திவசம் | - | நினைவுநாள் | கழட்டு | - | கழற்று |
| தேதி | - | நாள் | பண்டகசாலை | - | பண்டசாலை |
| நிபுணர் | - | வல்லுநர் | வத்தல் | - | வற்றல் |
| நிரந்தர வேலை | - | நிலையான வேலை | பதட்டம் | - | பதற்றம் |
| பஞ்சாங்கம் | - | நாளோதி | தின்னீர் | - | திருநீறு |
| பதிவிரதை | - | கற்புடையாள் | திருவாணி | - | திருகாணி |
| பத்திரிகை | - | இதழ் | அதிகாரி | - | அலுவலர் |
| பந்தபாசம் | - | பிறவிக்கட்டு | அந்நியர் | - | அயலார் |
| பாரம் | - | சுமை | அலங்காரம் | - | ஒப்பனை |
| பாலகர்கள் | - | சிறுவர்கள் | அனுமதி | - | இசைவு |
| பாணிக்கிரகணம் | - | திருமணம் | ஆரம்பம் | - | தொடக்கம் |
| பிரசாரம் | - | பரப்பு வேலை | இருதயம் | - | நெஞ்சு |
| பிரதட்சணம் | - | வலம்வருதல் | உபயோகம் | - | பயன் |
| பூர்வம் | - | முன்னாள், முந்திய | கவனம் | - | கருத்து |

| | | | |
|---|---|---|---|
| குமாரன் | - புதல்வன் | வெண்ணை | - வெண்ணெய் |
| விஞ்ஞானம் | - அறிவியல் | நாகரீகம் | - நாகரிகம் |
| சந்தா | - கட்டணம் | சாணி | - சாணம் |
| ஜாதி | - இனம் | அதிபர் | - தலைவர் |
| சந்தேகம் | - ஐயம் | அர்த்தம் | - பொருள் |
| சரித்திரம் | - வரலாறு | அவசரம் | - விரைவு |
| சின்னம் | - அடையாளம் | ஆபத்து | - இடர் |
| தீபம் | - விளக்கு | ஆராதனை | - வழிபாடு |
| நாயகன் | - தலைவன் | உத்தரவு | - கட்டளை |
| பயம் | - அச்சம் | உற்சாகம் | - ஊக்கம் |
| புத்தி | - அறிவு | கிராமம் | - சிற்றூர் |
| மந்திரி | - அமைச்சர் | கோபம் | - சினம் |
| வினாடி | - நொடி | விரதம் | - நோன்பு |
| சிபாரிசு | - பரிந்துரை | பதில் | - விடை |
| விபத்து | - துயர நிகழ்ச்சி | சங்கம் | - மன்றம் |
| ஜனங்கள் | - மக்கள் | சபதம் | - சூளுரை |
| ஜயம் | - வெற்றி | சிகிச்சை | - மருத்துவம் |
| ஜாக்கிரதை | - விழிப்பு | தினசரி | - நாள்தோறும் |
| ஜெபம் | - தொழுகை | நஷ்டம் | - இழப்பு |
| ஜேஜே | - வெற்றி வெற்றி | நிபுணர் | - வல்லுநர் |
| ஸ்தாபனம் | - நிலையம் | பிரச்சினை | - சிக்கல் |
| மாமூல் | - வழக்கம் | போதனை | - கற்பித்தல் |
| ரத்து | - நீக்கம் | முக்கியம் | - முதன்மை |
| இன்னைக்கு | - இன்றைக்கு | வேதம் | - மறை |
| துகை | - தொகை | மைதானம் | - திடல் |
| ரொம்ப | - நிரம்ப | | |